# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,974 —1964 මාර්තු 6 වැනි සිකුරාදා —1964.3.6

13,974 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு மாச்சு மாதம் 6 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 55 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 56 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | 59 |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சதவீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டு,/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய, 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சாகால முடிவில் அவர்களின் நியமன ஸ்திரம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனுல் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிருர் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாராளுல் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாராளுல், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—"புது உத்தியோகத்தர்" என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு, மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **வேறு விதிகள்.**—(i) அரசாங்க சேவையில் இப்போது இருப்பவ ராயும், வேண்டிய தகைமைகளைக் கொண்டவர்களாயுமுள்ள உத்தி யோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் தங்கள் பகுதித் தலைவா கள் மூலம் அனுப்பவேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களை அந்த அந்தப் பகுதித் தலைவர்கள் அனுப்பும்போது, குறித்த விண்ணப்ப தாரர்கள் (தெரிவுசெய்யப்பட்டால்) கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்குவிதிக் கிணங்க அவ்விண்ணப்பதாரரை விடமுடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சாத்திக்குக் குணநலவத்தாட்சிப பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்த வோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலை யிட்டு, அவருக்கு ஆதரவு தேடமுயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்ப, அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப்பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.

---

## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் தேவை

**தரக் கட்டுப்பாட்டு உதவியாளர்**

**கல்வித் தகைமை.**—(அ) உயர்தரப் பாடசாலைத் தராதரப் பத்திர பரீட் சையில் அல்லது இலண்டன் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் இர சாயனவியல், தாவரவியல்/உயிரினவியல்/தூய கணிதம் என்பவற்றில் சித்தியெய்தியிருக்க வேண்டும்;

அல்லது

(ஆ) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் இரசாயனவியல், தாவரவியல்/உயிரினவியல்/தூய கணிதம், என்பனவற்றில் விசேஷ திறமை பெற்றவராகவும், அத்துடன் 2 வருடகாலம் பரிசோதனைச்சாலையில் வேலைசெய்து அனுபவம் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

**சம்பளவிகிதம்.**—இந்தத் தொழிலுக்கான சம்பள விகிதமானது—

ரூபா $\frac{1{,}860—3{,}780}{16 \times 120}$ அடிப்படை வருடமொன்றுக்கு

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய/பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும். அரசாங்க மொழிக்கொள்கையைக் குறிப்பாக 1956 ம் வருடத்திய 33 ம் இலக்க உத்தியோக மொழிச்சட்ட நியதிகளை அமுலாக்கும் முகமாக எற்கனவேயும், இதற்கப்புறமும் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பிரஸ்தாப விண்ணப்பதாரர்கள் கட்டுப் பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கொழும்பில் அல்லது வாழைச்சேனையில் தங்கியிருந்து வேலை செய்யவேண்டும்.

அலவான்சுகள் கூட்டுத்தாபன விகிதங்களின்படி செலுத்தப்படும். தற் சமயம் மேற்படி விகிதங்கள் அரசாங்கம் வழங்கும் விகிதங்களை ஒத் திருக்கின்றன.

விண்ணப்பதாரர்கள், இக்கந்தோரில் கிடைக்கப்பெறும் பாரங்களில் தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து 1964 ம் ஆண்டு மார்ச் 16 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க்காணும் விலாசத்திலுள்ள தலைவருக்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டும். தபால்மூலம் விண்ணப்பப்பாரங்களைப் பெற விரும் பும் ஊழியர்கள் தங்கள் விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய ஒரு கடித உறையினை அனுப்பி வைக்கக் கோரப்படுகின்றார்கள்.

தலைவர்,
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

த. பெ. இல. 1367,
கொழும்பு 1, 1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ந் தேதி.

2–945—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தபாற் தந்திப் பகுதி

### பொத்தொடை, கதிரானையிலுள்ள கடல் கடந்த தந்திப் போக்கு வரத்து கம்பியில்லா நிலையங்களிலுள்ள உபயோகிக்கத்தகாத சாதனங்கள் முதலியன வாங்குவதற்கான கேள்விப் பத்திரம்

நீர்கொழும்புக்கு அண்மையிலுள்ள கதிரானையிலும் பொத்தொடையி லும் கடல் கடந்த தந்திப் போக்குவரத்து கம்பியில்லா நிலையங்களில் உள்ள உபயோகிக்கத்தகாத சாதனங்கள் முதலியன வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 8 ம் திகதி மு.ப. 9.30 மணி வரை, கொழும்பு, கோட்டை, மில்லேர்ஸ் கட்டிட 1 ம் தளத்திலுள்ள கடல் கடந்த தந்திப் போக்குவரத்து முகாமையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கூடுதலான விபரங்களை, முகாமையாளர், கடல் கடந்த தந்திச் சேவை, 1 ம் தளம், மில்லேர்ஸ் கட்டிடம், யோக் வீதி கோட்டை, கொழும்பு, அல்லது பதில் இஞ்சினியர் (கம்பியில்லா) பொத்தொடை நீர்கொழும்பு, ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பங்கள், கடல் கடந்த தந்திப் போக்கு வரத்துச் சேவை முகாமையாளரிடம் அல்லது பொத்தொடை கடல் கடந்த தந்திப் போக்குவரத்து சேவை கம்பியில்லா நிலையத்தின் பதில் இஞ்சினியரிடமிருந்து (கம்பியிலலா) பெற்ற பத்திரங்களில் (இரட்டைப் பிரதிகளில்) அனுப்பப்படல் வேண்டும். கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் தந்திக் காசாளரிடம் அல்லது வெளியிடமாயின் அப் பகுதி உள்ளூர் தபாற் கந்தோர்த் தலைவரிடம் கேள்விப்பொறுப்புப்பணமாக ரூபா 100/- கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 6 ந் திகதி நண்பகல் வரை வழங்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் உபயோகிக்கத்தகாத சாதனங்கள் முதலியன (பொத்தொடை, கதிரானை) வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் என்று குறிப்பிடப்பட்டும், முகாமையாளர், கடல் கடந்த தந்திப் போக்கு வரத்துச் சேவை த. பெ. இல. 235, 1 ம் மாடி, மில்லேர்ஸ் கட்டிடம், கொழும்பு 1 என்று விலாசமிடப்பட்டதுமான உறைகளில் உள்ளடக்கப்பட்டு, அவருக்கு 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 8 ம் திகதி மு.ப. 9.30 மணிக்குக்கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

5. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் அவரது கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட் களுக்குள் கேள்விப்பத்திரப் பெறுமதியில் முழுத் தொகையை, கொழும்பு மத்திய தந்திக் கந்தோர் பிரதான தந்திக் காசாளரிடம் கட்ட வேண்டும். அல்லது தபாற் தந்தி தலைமை அதிபதியின் பெயருக்குச் சாட்டப்பட்ட குறுக்குக் கோடிட்ட காசோலையை கடல் கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை முகாமையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

6. 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 8 ம் திகதி மு.ப. 10 மணிக்கு கடல் கடந்த தந்திப் போக்குவரத்துச் சேவை முகாமையாளர் காரியாலயத் தில் கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திர கையொப்ப தாரர்கள் சமூகமளிக்கவேண்டும்.

தபாற் கந்தோர்த் தலைமை
அதிபதிக்காக.

பிரதம தபாற் கந்தோர்,
கொழும்பு 1.

3–130—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

## நீர்ப்பாசன திணைக்களம்

### மன்னார் உப பிரிவு

கூராய் குளத்தின் இடதுபுற பிரதான வாய்க்கால் வெட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வடமாகாண நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு மார்ச மாதம் 31 ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 43,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காய வெற்றுப்பத்திரங்கள் மன்னார் உப பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 21.3.64 தொடக்கம் 27.3.64 வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்கட்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கட்கு கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்று அறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50/- கேள்விப்பத்திரக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். அல்லது இக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்தி அதன் பற்றுச் சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்விபற்றிய மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மன்னார் உப பகுதி.

முருங்கன்,
26.2.64.

3-203—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

---

## மோட்டார் வாகனங்களை விலைக்கு வாங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்

கீழ்க்காணும் இப்பகுதி மோட்டார் வாகனங்களை வாங்குவதற்கும் அகற்றுவதற்குமான கேள்விப்பத்திரங்கள், கிருல வீதி, கொழும்பு 5 ல் உள்ள நில அளவையாளர் தலைமை அதிபதியால், 1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

உவில்லீஸ் யூனிவேசல் ஜீப் ஈ. வை. 8676
உவில்லீஸ் யூனிவேசல் ஜீப் 1ஸ்ரீ962
உவில்லீஸ் சரக்கு, பிரயாணிகள் வாகனம் 33ஸ்ரீ1582
ஜீப்பின் ஸ்பெண் இழுவண்டி ரீ. ஆர். 1306

2. வாகனங்கள் இப்போது இருக்கும் நிலையிலேயே விற்பனைக்கு விடப்படும். போக்குவரத்து உத்தியோகத்தரின் அனுமதியுடன் அவைகளை இக்கந்தோரில், கந்தோர் நேரங்களில் பார்வையிடலாம்.

3. கேள்வித்தொகை ஒவ்வொரு வாகனத்திற்கும் வெவ்வேறாகக் குறிக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் விலாசத்தில் ரூபா 50 பிணைப் பணம் ரொக்கமாக கட்டிப் பெறக்கூடிய பத்திரங்களில் கேள்விப்பத்திரங்களை இரட்டைப் பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். எந்தக் கேள்விப் பத்திரகாரரும், அவருடைய கேள்விப்பத்திரம் ஏற்றுகொள்ளப்பட்டது என்ற அறிவித்தல் எழுத்தில் கிடைத்த ஐந்து நாட்களுக்குள் கேள்வி வீதத்தின் முழுத்தொகையையும், கட்ட மறுத்தாலோ அல்லது தவறினாலோ, அவரது பிணைப்பணம் பறிமுதலாக்கப்பட்டு, வாகனம் வேறு கேள்விப்பத்திரகாரருக்குக் கொடுக்கப்படும் ; அத்துடன் அவர், அவரது பெயரை முடிக்குரிய தவறிய கேள்விப்பத்திரகாரர் பட்டியலில் சேர்ப்பதற்கு ஆளாவர். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் முழுத் தொகையையும் கட்டிய மூன்று நாட்களுக்குள் வாகனங்களை இப்பொழுது இருக்கும் இடத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

4. விண்ணப்பப்பத்திரங்களை 1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

5. கேள்விப்பத்திரங்கள், பிரதி நில அளவையாளர் தலைமை அதிபதியின் அறையில் 1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணிக்கு திறக்கப்படும்.

6. கேள்விப்பத்திரகாரர் விரும்பினால், அவர்களோ அல்லது அவர்களுடைய அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளோ, கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

7. கேள்விப்பத்திரகாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கேள்விப் பத்திரம் முடிவுற்ற திகதியிலிருந்து நான்கு வாரங்கள் வரை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக வைத்திருத்தல் வேண்டும்.

8. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் " மோட்டார் வாகனங்களை விலைக்கு வாங்குவதற்கான கேள்விப்பத்திரம் " என்ற அடையாளமிட்டு பதிவுத்தபாலில், செ. வன்னியசிங்கம், நில அளவை அத்தியட்சர், தலைமை நிலையம், த. பெ. இல. 506, கொழும்பு 5, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

9. பதிவுத்தபாலில் அனுப்பவிரும்பாத கேள்விப்பத்திரகாரர்கள் அவர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதி மூலம் (அட்டையில் கேள்விப்பத்திரகாரரின் சேவையின் விபரம், பெயர், விலாசம் முதலியவற்றைத் தெளிவாக கொடுத்தல் வேண்டும்) நேர்முகமாக திரு. செ. வன்னியசிங்கம், நில அளவை அத்தியட்சர், தலைமை நிலையம், அவர்களிடம் கொடுத்துப் பற்றுச் சீட்டுப்பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

10. கேள்வித்தொகையை பத்திரங்களில் இலக்கத்திலும் சொல்லிலும் எழுதவேண்டும். சொற்களில் அல்லது இலக்கங்களில் ஏதாவது வேற்றுமை காணப்படும் விண்ணப்பம் விலக்கப்படுவதற்கு ஏதுவாகும். விண்ணப்பங்களிலுள்ள மாற்றங்கள் அல்லது அழிப்புகள் எல்லாம் கேள்விப்பத்திரகாரருடைய கையெழுத்தின் முதற்குறிப்பு இடப்பட்டிருத்தல் வேண்டும்.

11. கேள்விப்பத்திரப் பிணைப்பணம், 3 ம் பந்தியிலுள்ள நிபந்தனையைப் பொறுத்தே திருப்பிக் கொடுக்கப்படும்.

12. விசாரணையில்லாமல் எந்த அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் விலக்கவும், கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியை ஏற்கவும் அரசாங்கத்திற்கு உரிமை உண்டு.

13. வேறு எந்தத் தகவலும், போக்குவரத்து உத்தியோகத்தர், நில அளவைப் பகுதி, கிருல வீதி, கொழும்பு 5, அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. காத்திகேசு,
நில அளவையாளர் தலைமை அதிபதி.

பிரிவு " டி ",
த. பெ. இல. 506,
கொழும்பு,
1964 ம் ஆண்டு பெப்புருவரி மீ 25 ந் உ.

3—249—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

### அறிவித்தல்

**அம்பாறை II ம் தர டிப்போவில் கட்டிடங்கள், வீதிகள், காலைகள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள்**

மேற்குறித்த தலைப்புடன் 14.2.64 ம் திகதிய இவ்வர்த்தமானியில் வெளிவந்த கேள்விப்பத்திரத்தைத் தொடர்ந்து, இக்கேள்விப்பத்திர முடிவுத் திகதி 18.3.1964 வரை நீடிக்கப்பட்டுள்ளது என இத்தால் உத்தேச கேள்விப்பத்திரகாரருக்கு அறிவிக்கப்படுகிறது.

200, கிருல வீதி, கொழும்பு 5,
1964 ம் ஆண்டு பெபருவரி மீ 29 ந் உ.

செயலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

3—234—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

## சௌக்கியப் பகுதி—கொழும்புக் கூட்டு ஆஸ்பத்திரிகள்

### பாவிக்கமுடியாத வாகனத்தை வாங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

கொழும்பு டீ சொய்சா ஆஸ்பத்திரியில் இருக்கும் CL 7603 எண் கொண்ட உபயோகிக்க முடியாத வாகனத்தை வாங்குவதற்கான மெழுகிட்டு அடைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1964 ம் ஆண்டு பங்குனி மாசம் 16 ம் திகதி (16.3.64) திங்கட்கிழமை காலை 10 மணிவரை கொழும்புக் கூட்டு ஆஸ்பத்திரி அத்தியட்சகரால் ஏற்றுக் கொள்ளப்படும். டீ சொய்சா ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகருடன் ஒழுங்கு செய்து அலுவலக நேரங்களில் இந்த வாகனத்தை பார்வையிடலாம்.

2. கொழும்புக் கூட்டு ஆஸ்பத்திரி அத்தியட்சகரின் வரவுக்கணக்கில் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டை சமர்ப்பித்ததின்பேரில்; 1964 ம் ஆண்டு பங்குனி மாசம் 13 ம் திகதி, வெள்ளிக்கிழமை (13.3.64) நண்பகல் 12 மணிவரை, கொழும்பு கூட்டு ஆஸ்டத்திரி அத்தியட்சகரின் கணக்குப் பகுதி அலுவலகத்தில் பெறக்கூடியனவான கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளில் கேள்விகளை நிரப்பவேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்கமூலையில் " உபயோகிக்க முடியாத மோட்டார் வாகனத்தை வாங்குவதற்கான கேள்விப்பத்திரம் " என்று குறிப்பிட்டு கொழும்புக்கூட்டு ஆஸ்பத்திரி அத்தியட்சகர், பெரியாஸ்பத்திரி, கொழும்பு என்று முகவரியிட்டு அனுப்பவேண்டும். அனுப்புபவரின் பெயர், முகவரி என்பன தபாலுறையின் இடது பக்க கீழ்மூலையில் எழுதப்படவேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

4. மேலே முதற் பகுதியில் குறிப்பிட்ட தேதியன்று, உரிய நேரம் முடிந்தவுடன், கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாய் இருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரரின் பெயர்களும் தொகைகளையும் வாசித்துக் காண்பிக்கப்படும்.

5. ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விக்காரர்களுக்கு அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் தெரிவிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று நாட்களுக்குள், முழுப் பணத்தையும் செலுத்தி வாகனத்தை எடுத்துச் செல்லத்தவறினால், எதுவித கோரிக்கைக்கும் இடமின்றிக் கேள்விப் பத்திர கட்டுப்பணம் பறிமுதலாக்கப்படும்.

6. எந்த ஒரு கேள்வியையேனும் ஏற்றுச்கொள்ளவோ, அல்லது சகல கேள்விகளையும் நிராகரிப்பதற்கோ கொழும்புக் கூட்டு ஆஸ்பத்திரி அத்தியட்சகருக்கு உரிமையுண்டு.

எம். ஜே. டி. எஸ். ஜயசேகர,
அத்தியட்சகர்.

கொழும்புக் கூட்டு ஆஸ்பத்திரி,
பெரியாஸ்பத்திரி, கொழும்பு,
1964 ம் ஆம் பங்குனி மீ 29 ந திகதி.

3-206—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

---

## கல்விப் பகுதி

கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமாகக் கேள்விப் பத்திரங்கள் அக்கரைப்பற்று கல்விக் காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் 1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
| --- | --- |
| அக்/ஒலுவில் அக்கரை அ. மு. க. பா. . . | 3 வகுப்பறைகள் |

(2) இவ்வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் கல்வி இலாகாவினாலும் பகிரங்க வேலை இலாகாவினாலும், கீழே குறிக்கப்பட்டுள்ள தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரர்களுக்கும், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும், கூட்டுறவுத் தொழிற் சங்கங்களுக்கும் வழங்கப்படும்.

குறிப்பு.—கல்விப் பகுதி ரூபா 8,000.

பகிரங்க வேலைப் பகுதி ரூபா 8,000.

ஒவ்வொரு வேலைக்கும் கிழக்குப் பிராந்திய உதவி வித்தியாதிபதி கந்தோரிலும் அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100/– பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை அக்கரைப் பற்று கல்வி அதிகாரி அவர்களிடம் சமர்ப்பிப்பித்து கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

1964 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19 ந் திகதி பி. ப. 2.30 மணி வரையுமே கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். காசோலைகள், மணி யோடர்கள், போஸ்றல் ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(3) கேள்விப் பததிரங்கட்குப் பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரங்கள் அக்கரைப்பற்று கல்வி அதிகாரி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்கட்கு மட்டுமே பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரம் வழங்கப்படும்.

(4) பதிவு செய்த தபால் மூலம் அனுப்பவிரும்பாத உள்ளூர் விண்ணப்பக்காரர்கள் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப் பத்திரங்களை அக்கரைப்பற்று கல்விக் காரியாலய உத்தியோகத்தரிடம் சேர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மீது வேலையின் விபரங்களும் விண்ண்ப்பக்காரர் பெயரும் விலாசமும் எழுதப்படவேண்டும். அக்ரைப்பற்றுக் கல்விக் காரியாலயத்தில் இவ்வேலைகட்குரிய படங்களும் மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

(5) 1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ந் திகதி பி. ப. 2.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்வையிடும்போது விண்ணப்பக்காரர் பிரசன்னமாய் இருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பக்காரர்களுக்கு விண்ணப்பத்தொகைகளும், விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக்காட்டப்படும்.

(6) விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரையிலுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

(7) இவ்வேலைகள் செய்யப்படும் பொழுது இலங்கையரும் குறிப்பிட்ட வேலை நடக்கும் பிரதேசத்தில் வசிப்பவருமான வேலையாட்களையே அமர்த்தவேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத்தவறினால், அத்தவறு ஒப்பந்தச் சரத்துக்களை மீறியதாகக் கருதப்பட்டு ஒப்பந்தம் ரத்துச்செய்யப்படக்கூடும். எனினும் தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர் கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் இலங்கையரல்லாத வேலையாட்களையே அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கைவாசியான வேலையாட்களையே அமர்த்துவதற்கு அனுமதியளிப்பர். இந்த அனுமதியில்லாமல் இலங்கையரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தவிர்க்கப்பட்டுள்ளது.

(8) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் ஓடுகள் பாவிக்க வேண்டிய கட்டிடங்கட்கு உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட நவீனரக ஓடுகளையே பாவிக்கவேண்டும். கட்டிட மேற்பார்வையாளரிடம் உள் நாட்டில் தயார் செய்யப்பட்ட ஓடுகள் நல்ல ரகத்தில் பெறமுடியாதென அத்தாட்சிப்படுத்தினாலன்றி, வேறு எவ்வித ஓடுகளும் பாவிக்க அனுமதியளிக்கப்படமாட்டாது. ஓடுகளின் தராதரத்தை நிச்சயப்படுத்த வேண்டிய சோதனைகள் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கூடத்தின் விண்ணப்பக்காரர்கள் செலவில் நடத்தவேண்டும். இதுமாத்திரமன்றி, தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள், தாங்கள் உபயோகிக்கவிருக்கும் ஓடு, கல் சிலவற்றையும் அவ்வோடுகள் சகல பிரமாணங்களுக்கும் அமைவாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு அத்தாட்சியாக, இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் அத்தாட்சிப்பத்திரம் ஒன்றையும் சமர்ப்பித்து மேற்பார்வையாளர்களின் அங்கீகாரம்பெறவேண்டும்.

எம். எஸ். எம். ஹத்தாத்,
வித்தியாதிகாரி, அக்ரைப்பற்று.

கல்விக் காரியாலயம், அக்கரைப்பற்று,
1964 ம் ஆம் பெப்புருவரி மீ 28 ந உ.

3–169—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

# ஏல விற்பனைகள்

## பொலிஸ் பகுதி

### பாவிக்கப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை

பாவிக்கப்பட்ட காக்கி உடைகள், தோல் சப்பாத்துகள், மழைக் கோட்டுகள், நுளம்பு வலைகள், தும்பு மெத்தைகள், தொப்பிகள், உடுப்புப் பெட்டிகள் ஆகியன 1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ந் திகதி காலை 10 மணிக்கு பம்பலப்பிட்டி "ஹவ்லொக்" வீதியிலுள்ள பொலீஸ் மேலதிகப்படை நிலையத்தில் ஏலத்தில் விற்கப்படும்.

2. விற்பனைக்குரிய பொருட்களை கிழமை நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும் பார்வையிடலாம்.

3. பொருட்களை வாங்கியவுடன் அவற்றின் முழுப் பெறுமதியும் செலுத்தப்படல் வேண்டும்.

எச். ஜீ. பௌட்வின்,
உதவி பொலிஸ் அத்தியட்சகர்.

பொலீஸ் மேலதிகப்படை நிலையம்,
பம்பலப்பிட்டி, 24.2.64

3–257—6.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,974

---

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க் பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500 கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

*அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்*

## "இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

*1.* பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

*2.* தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

*3.* கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

*4.* கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

*5.* சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல்வேண்டும்.

*6.* "நகலை" கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக "ரைப்" அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

*7.* கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

*8.* வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

*9.* நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்றால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

*10.* அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1962ம் ஆண்டு யூலை மாதம் 16 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ச. |
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | ... | ... | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | ... | ... | 10 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | ... | ... | 110 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | ... | ... | 220 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

*11.* வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

*12.* வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட் கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

*13.* சந்தா விபரம் 1–8–63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் | ... | ... | ... | 27 | 50 | ... | 40 | 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | ... | ... | ... | 17 | 50 | ... | 23 | 00 |
| முதற் பகுதியின் இருபிரிவுகள் | ... | ... | ... | 25 | 00 | ... | 33 | 00 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|---|
| | | சதம் | | சதம் |
| (அ) | (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | ... | 20 |
| | (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | ... | 20 |
| (ஆ) | (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | ... | 15 |
| | (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | ... | 15 |

இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத் தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.